**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**OS.No.532/2025 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | பாஸ்கர் |
| த/பெ. | குருசாமி |
| வயது | 46 |
| வசிப்பிடம் | எண்.79, காமராஜர் தெரு, ஜீவா நகர், மரக்கடை அஞ்சல், திருச்சிராப்பள்ளி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| தொழில் | உணவக தொழில் |

**முதல் விசாரணை 20.07.2026**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி வட்டம், மரக்கடை அஞ்சல், ஜீவா நகர், காமராஜர் தெரு, எண்.79-ல் வசிக்கும் பாஸ்கர் த/பெ.குருசாமி, வயது 46 ஆகிய நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

1. வம்சாவழி பட்டியல் அசல் வா.சா.ஆ.1.
2. 17.06.2004 தேதியிட்ட கிரய பத்திர ஆவண எண்.1638/2004 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2.
3. 03.06.2023 தேதியிட்ட வாதியின் கடவுச்சீட்டு அசல் வா.சா.ஆ.3.
4. 08.07.2010 தேதியிட்ட கிரய பத்திரம் ஆவண எண்.2587/2010 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4.
5. 08.07.2010 தேதியிட்ட கிரய பத்திரம் ஆவண எண்.2588/2010 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5.
6. 28.12.2001 தேதியிட்ட கிரய பத்திரம் ஆவண எண்.6096/2001 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6.
7. 30.11.2001 தேதியிட்ட கிரய பத்திரம் ஆவண எண்.6098/2001 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7.

8. 15.07.2019 தேதியிட்ட OS.No.260/2016 என்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதற்கான நீதிமன்றம் வழங்கிய உத்தரவு கணினி நகல் வா.சா.ஆ.8.

9. வாதியின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.9.

10 29.08.2019 தேதியிட்ட விடுதலை பத்திரம் ஆவண எண்.6379/2019 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10.

11. 22.02.2025 தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு (அஞ்சலக ரசீதுடன்) அலுவலக நகல் வா.சா.ஆ.11.

12. 25.02.2025 தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞா் அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.12.

13. 07.06.2025 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் (01.06.2024 முதல் 06.06.2025 வரை) கணினி நகல் வா.சா.ஆ.13.

14. தாவா முதல் அட்டவணைக்கு உண்டான வழிகாட்டி மதிப்பு (3ம் தரப்பு அபிடவிட் படி) அசல் வா.சா.ஆ.14.

15. 07.06.2025 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் (01.01.2010 முதல் 06.06.2025 வரை) கணினி நகல் வா.சா.ஆ.15.

16. 07.06.2025 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் கணினி நகல் வா.சா.ஆ.16.

17. 07.06.2025 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் கணினி நகல் வா.சா.ஆ.17.

18. தாவா 4, 5வது அட்டவணையில் உள்ள சொத்துக்களுக்கு உண்டான தமிழ்நாடு வழிகாட்டி மதிப்பு அசல் வா.சா.ஆ.18.

19. தாவா 2, 3வது அட்டவணையில் உள்ள சொத்துக்களுக்கு உண்டான தமிழ்நாடு வழிகாட்டி மதிப்பு அசல் வா.சா.ஆ.19.

(முதல் விசாரணை தொடர்ச்சிக்காக 13.08.2026க்கு ஒத்தி வைக்கப்படுகிறது)